Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 29, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 199

# தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்





சென்னை, ஜனவரி 29, 2023: தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (29.1.2023), சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலிமாறன் வளாகத்தில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தாக்கல் செய்யப்பட உள்ள ஒன்றிய அரசின் 2023-24 நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடர் மற்றும் குடியரசுத் தலைவர் உரை குறித்து விவாதிக்கப்பட்டது. கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட வேண்டிய முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அதுபோது, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்கள், தமிழ்நாடு தொடர்பான முக்கிய பிரச்சினைகள் குறித்தும் - அகில இந்திய அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ள 2002ஆம் ஆண்டு நடைபெற்ற குஜராத் வன்முறை குறித்து 'பிபிசி' வெளியிட்ட ஆவணப் பட சர்ச்சை - இந்திய பங்குச் சந்தையில் அதானி குழுமத்தால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து வெளிவந்துள்ள அறிக்கை மற்றும் இந்திய அரசமைப்பின் அடிப்படை பண்புகளை மாற்றி அமைக்கும் முயற்சியாக, குடியரசு துணைத் தலைவர் உள்ளிட்ட சிலர் தெரிவிக்கும் தேவையற்ற கருத்துகள் குறித்தும், நாடாளுமன்றத்தில் உறுதியான விவாதங்களை எடுத்து வைத்திட, கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேபோன்று, தமிழ்நாடு அரசால், ஒன்றிய அரசுக்கு எழுதப்பட்டுள்ள கடிதங்களின் நிலை குறித்தும் - முக்கியமாக

நீட் தேர்வுக்கு விலக்களிக்கும் மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவது;

தமிழக மீனவர்கள்மீது இலங்கை அரசு தாக்குதல் நடத்துவது, கைது செய்வது, படகுகளை இலங்கை ராணுவம் பறிமுதல் செய்து நாட்டுடைமை ஆக்குவது;

சிறுபான்மையினர் மாணவர்களுக்கு 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை வழங்கி வந்த மெட்ரிக் கல்வி உதவித் தொகையை நிறுத்தியது;

மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிப்பது; மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பது; சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது;

கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து தடுக்கும் தடுப்பூசிகளைப் பெறுவது;

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்கள் மற்றும் ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது; என்.எல்.சி. நிறுவனத்தின் வேலைவாய்ப்பில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது;

இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வு அளிப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் - அகில இந்தியாவில் எதிரொலிக்கும் பிரச்சினைகள் குறித்தும் இரு அவைகளிலும் குரல் எழுப்ப வேண்டுமென அறிவுறுத்துப்பட்டது.





## மத்திய பிரதேசத்தில் 2 போர் விமானங்கள் நொறுங்கி விழுந்து விபத்து: ஒரு விமானியை தேடும் பணி தீவிரம்


சென்னை, ஜனவரி 29 2023: மத்தியப் பிரதேசத்தில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான 2 போர் விமானங்கள் நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளாகின.

விமானப் படை வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து நடந்ததாகத் தெரிகிறது. விபத்துக்குள்ளான விமானங்களில் சுகோய் 30 ரக விமானம் மற்றும் மிராஜ் 2000 ரக போர் விமானம் ஆகும்.

இந்த 2 விமானங்களும் குவாலியர் விமானப்படை தளத்திலிருந்து புறப்பட்டுள்ளது.

மொரீனா என்னும் கிராமப் பகுதியில் 2 விமானங்களும் நொறுங்கி விழுந்துள்ளது. சம்பவ பகுதியில் மீட்பு, நிவாரணப் பணிகள் முடுக்கிவிட்டடப்பட்டுள்ளன.

இந்த விபத்து குறித்து இந்திய விமானப் படை விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. 2



போர் விமானங்களும் நடுவானில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதா இல்லை வேறு காரணங்களால் விபத்து நடந்ததா என்று விரைவாக விசாரிக்கடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகோய் 30 விமானத்தில் 2 விமானிகள் இருந்துள்ளனர். இவர்கள் இருவரும் பாராசூட் மூலம் பத்திரமாக இறங்கியதாகத் தெரிகிறது.

மிராஜ் 2000 போர் விமானத்தில் இருந்த ஒருவரை மட்டும் தேடும் பணி நடப்பதாகவும் விமானப் படை தெரிவித்துள்ளது. இந்த விபத்து குறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு இந்திய விமானப் படைத் தளபதி விளக்கமாக விவரித்துள்ளார்.

இந்திய விமானப் படையில் சுகோய்-30 எம்கேஐ போர் விமானங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்த சுகோய்-30 ரக விமானங்களை ரஷ்யா தயாரித்து வழங்கி வருகிறது. தற்போது இந்திய விமானப் படையில் 272 சுகோய்-30 எம்கேஐ ரக விமானங்கள் உள்ளன.

இந்த விமானங்களின் பாகங்கள் ரஷ்யாவில் இருந்து கொண்டு வரப்பட்டு பெங்களூருவில் உள்ள பொதுத் துறை நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தில் (எச்ஏஎல்) பொருத்தப்பட்டு விமானம் இயக்கப்படுகிறது. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள எச்ஏஎல் நாசிக் மையத்திலும் சுகோய் விமான பாகங்களைப் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

மிராஜ் 2000 போர் விமானம் பிரான்ஸ் நிறுவனம் தயாரிக்கும் ரபேல் விமானத்திற்கு இணையானதாகும். இது மிக உயரத்தில் இருந்து லேசர் நுட்பத்தில் குண்டு வீசக் கூடியது. இது இந்த விமானத்தின் சிறப்புகளில் ஒன்று. 1986ம் ஆண்டுக்குப் பிறகு இந்திய விமானப்படைக்கு இந்த விமானம் வந்தது. அப்போது பாகிஸ்தான் அமெரிக்காவிடம் இருந்து எப்-16 ரக போர் விமானங்களை வாங்கியது. அதனால் அதைவிட சக்தி வாய்ந்த மிராஜ் 2000 ரக போர் விமானங்களை பிரான்சிடம் இருந்து இறக்குமதி செய்தது, இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அரசின் இணையதளத்தில் தமிழ்நாடு பெயரில் இருந்த எழுத்துப்பிழை திருத்தப்பட்டது

சென்னை, ஜனவரி 29 2023: இந்திய அரசின் இணைய பக்கத்தில் தமிழ்நாயுடு என்று குறிப்பிடப்பட்டிருந்த எழுத்துப்பிழையானது தற்போது தமிழ்நாடு என்று திருத்தப்பட்டுள்ளது.

நாட்டின் 74 வது சுதந்திரம் தினம் கடந்த 26ம் தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. டெல்லி கடமை பாதையில் குடியரசு தலைவர் திரௌபதி முர்மு தேசிய கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்த விழாவில் எகிப்து அதிபர் அல் சிசி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். பின்னர் நடைபெற்ற முப்படை அணிவகுப்பை பார்வையிட்ட குடியரசு தலைவர் திரௌபதி முர்மு அணிவகுப்பு மரியாதையை ஏற்று கொண்டார்.

இந்நிலையில் குடியரசு தினவிழாவில் பங்கேற்ற மாநிலங்களின் அலங்கார ஊர்திகளில் சிறந்த ஊர்தியை தேர்ந்தெடுப்பதற்கான ஆன்லைன் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்திய அரசின் இணைய பக்கத்தில் 17 மாநிலங்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தது. அதில் தமிழ்நாடு அரசின் பெயரானது எழுத்துபிழையுடன் காணப்பட்டது. தமிழ்நாடு என்பதற்கு பதிலாக 'தமிழ்நாயுடு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் தற்போது எழுத்துப்பிழை சரிசெய்யப்பட்டு தமிழ்நாடு திருத்தப்பட்டுள்ளது. இந்த பிழைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# டப்பிங் கலைஞர்கள் சங்கத்தின் பொருளாளர் சீனிவாச மூர்த்தி மறைந்தார்

சென்னை, ஜனவரி 29, 2023: டப்பிங் கலைஞர்கள் சங்கத்தின் பொருளாளர் திரு சீனிவாச மூர்த்தி இன்று (ஜனவரி 27) காலமானார். இவருக்கு வயது 50. சீனிவாச மூர்த்தியின் வீட்டு முகவரி: எண் 18 ஙி, கடம்பாடி நாயக்கர் தெரு, விஜயா நகர் அருகில், இரண்டாவது தெரு, ஸ்ரீதேவி கார்டன் ரோடு, வளசரவாக்கம், சென்னை - 87. இவரது இறுதி ஊர்வலம் சனிக்கிழமை (ஜனவரி 28) அன்று காலை 11 மணிக்கு இல்லத்தில் இருந்து புறப்பட்டு கேசவர்த்தினி இடுகாட்டை சென்றடையும்.



சீனிவாச மூர்த்தியின் மறைவுக்கு டப்பிங் கலைஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் திரையுலக பிரபலங்கள் தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

# சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் கிளாப் அடித்து துவக்கி வைத்த ஒய் ஜி மகேந்திரா இயக்கி நடிக்கும் 'சாருகேசி' திரைப்படம்

## என்னை அன்பால் மாற்றியவர் எனது மனைவி லதா: ரஜினி ரஜினிகாந்த் தான் ஒரே ஒரு சூப்பர்ஸ்டார்: ஒய் ஜி மகேந்திரா

சென்னை, ஜனவரி 29, 2023: நடிகர் ஒய் ஜி மகேந்திராவின் பிரபல நாடகமான சாருகேசி திரைப்படமாக உருவாக்கப்படவுள்ளது. இது குறித்த அறிவிப்பை சென்னை வாணி மஹாலில் நடைபெற்ற சாருகேசி நாடகத்தின் 50வது காட்சியில் வெளியிட்ட சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த், திரைப்படத்தை கிளாப் அடித்து துவக்கி வைத்தார்.




அறிவிப்பை வெளியிட்டு ரஜினிகாந்த் பேசுகையில், "1975-ல் ரகசியம் பரம ரகசியம் நாடகத்தை பார்க்க நான் சென்றபோது, என்னை உள்ளே அனுமதிக்கவில்லை. ஆனால் இப்போது சாருகேசி நாடகத்தின் 50வது காட்சி விழாவில் சிறப்பு விருந்தினராக வந்து இருக்கிறேன். இது எல்லாமே காலத்தின் செயல். நாகேஷ், ஜெயலலிதா, சோ, விசு போன்றவர்கள் யுஏஏ நாடகக்குழுவில் இருந்து வந்தவர்கள் ஆவார்கள். இது மிகவும் கட்டுக்கோப்பான குழுவாகும். இதில் படித்தவர்கள், பல துறை வல்லுநர்கள் இருந்தனர்," என்றார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உயிரோடு இருந்து இருந்தால் இந்த நாடகம் இன்னொரு வியட்நாம் வீடாக இருந்து இருக்கும், என்று அவர் மேலும் கூறினார். "இந்த ட்ராமாவை பொருத்தவரை கதை, திரைக்கதை, கதாபாத்திரங்கள், அவர்களது குணத்திற்கு உண்டான வசனங்களை அனைத்தும் சிறப்பாக அமைந்துள்ளன. ஒய் ஜி மகேந்திரா போன்ற ஒரு நடிகரை சினிமா சரியாக பயன்படுத்தவில்லை," என்று ரஜினிகாந்த் கூறினார். இந்த நாடகம் படமாக எடுக்கப்படும்போது மிகப்பெரிய வெற்றி அடையும் என்கிற நம்பிக்கை எனக்கு உள்ளது. வசந்த் திரைக்கதை எழுதவுள்ளார், அது இன்னும் சிறப்பானதாக இருக்கும், என்று அவர் தெரிவித்தார். "என் திருமணம் நடைபெறுவதற்கு முக்கியமான காரணம் ஒய் ஜி மகேந்திரா தான். மது, அசைவ உணவு பழக்கம் போன்றவை ஒருகாலத்தில் என்னோடு ஒட்டி இருந்தன. வெஜிடேரியன்ஸை பார்த்தால் எனக்கு பாவமாக இருக்கும். என்னை அன்பால் மாற்றியவர் எனது மனைவி லதா தான்," என்று சூப்பர் ஸ்டார் கூறினார். புகை, மது போன்ற உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பழக்கங்களை விட்டு விடுமாறு அனைவரையும் ரஜினிகாந்த் கேட்டுக் கொண்டார்

ஒய் ஜி மகேந்திரா பேசுகையில், "ஒரே ஒரு மக்கள் திலகம், ஒரே ஒரே நடிகர் திலகம், ஒரே ஒரு மெல்லிசை மன்னர், ஒரே கவிஞர் கண்ணதாசன், ஒரே ஒரு ரஜினிகாந்த் தான் சூப்பர் ஸ்டாராக இருக்கு முடியும்," என்று கூறினார். சாருகேசி நாடகத்திற்கு கதை, திரைக்கதை மற்றும் வசனங்களை வெங்கட் எழுதியுள்ளார். சாருகேசிக்கான பொறி காலம் சென்ற கிரேசி மோகனிடமிருந்து வந்ததாகும். இந்த நாடகத்தை ஒய் ஜி மகேந்திரா இயக்கியுள்ளார். அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு இசை கலைஞனின் வாழ்க்கையை சுற்றி கதை நடக்கிறது. இந்த நாடகத்தை திரைப்படமாக எஸ் ஏ ஆர் பி பிக்சர் ப்ரொடக்ஷன்ஸ் (ஸ்ரீ அக்ரஹாரம் ராஜலக்ஷ்மி ப்ரொடக்ஷன்) தயாரிக்கவுள்ளது. தேசிய விருது பெற்ற இயக்குநர் வசந்த் எஸ் சாய் இந்த படத்திற்கு திரைக்கதை அமைக்க உள்ளதோடு கிரியேட்டிவ் இயக்குநராகவும் பங்காற்ற உள்ளார். ஒய் ஜி மகேந்திரா முதன்மை வேடத்தில் நடித்து இயக்குகிறார். இதர நடிகர், நடிகைகள் மற்றும் படக்குழுவினர் குறித்த விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

# தெலுங்கு பர்னிங்ஸ்டார் சம்பூர்ணேஷ் பாபுவை கதாநாயகனாக வைத்து தமிழ் இயக்குனர் கோபிநாத் நாராயணமூர்த்தி இயக்கும் காமெடி படம்

சென்னை, ஜனவரி 29 2023: சம்பூர்ணேஷ் பாபு தெலுகு கதாநாயகர் இவரை பர்னிங்ஸ்டார் என்று அழைப்பார்கள் இவரை வைத்து தமிழ் இயக்குனர் கோபிநாத் நாராயணமூர்த்தி ஒரு காமெடி பிலிம் இயக்குகிறார் கோபிநாத் நாராயணமூர்த்தி இதுக்கு முன்னால் லண்டன் மற்றும் ஆங்காங்கில் இன்வெஸ்ட்மென்ட் பேங்கிங் மற்றும் ஐடி செக்டர்சில் பணிபுரிந்து இருக்கிறார் தமிழ் மட்டும் தெலுங்கு மொழிகளில் பைலிங்க்களாக சூட் பண்ணப்படுகிறது கோபிநாத் நாராயணமூர்த்தி டைரக்டர்ஸ் மெழுந்த் ராவ் மற்றும் ஆர் கண்ணன் இடம் பணிபுரிந்தார் அவர்கள் உடை அசோசியேட் டைரக்டராக இத்திரைப்படத்தில் ரோபோ சங்கர் சுருதி சுக்லா மொட்டை ராஜேந்தர் சுரேகா வாணி ஜிகர்தண்டா ராமச்சந்திரன் லொள்ளுசபா மாறன் லொள்ளுசபா மனோகர் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள்



பணிபுரிந்துள்ள மற்ற நடிகர்களும் மற்ற தொழில்நுட்ப கலைஞர்கள் காண பட்டியில் மிக விரைவில் அறிவிக்கப்படும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் அதாவது ஒரு முக்கிய கேமியோ ரோலில் ஒருவரை நடிக்க வைக்குவதற்காக டைரக்டர் தீவிர தேடலில் இறங்கியுள்ளார் திரைப்படத்தை தயாரித்தவர்கள் கோடீஸ்வர ராஜு ஜோஸ்டர் ப்ரொடக்ஷன்ஸ் மற்றும் கே எம் இளஞ்செழியன் நியூ நார்மல் ஃபிலிம் ஃபேக்டரி இசை அம்சமாக இருக்க வேண்டும் என்று டைரக்டர் முக்கிய கலைஞர்களாக ஆன கபிலன் லிரிக்ஸ் காக மற்றும் பாலிவுட்ல இருந்து சமீர் டண்டன் மியூசிக் இசைக்காக சேர்த்துள்ளார்கள்.

# குடியை பற்றி வித்தியாசமான கோணத்தில் உருவாகியுள்ள 'குடிமகான்'

சென்னை, ஜனவரி 29 2023: சினாரியோ மீடியா ஒர்க்ஸ் சார்பில் விஜய் சிவன் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'குடிமகான்'. நாளைய இயக்குநர் சீசன் 6-ல் 'குட்டி தாதா' என்கிற குறும்படத்திற்காக ரன்னர் அப் டைட்டில் வென்ற பிரகாஷ். என் இந்தப்படத்தின் மூலம் வெள்ளித்திரையில் இயக்குநராக அடியெடுத்து வைத்துள்ளார். நாளைய இயக்குநர் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் இதுவரை தனித்தனி நபர்களாகத்தான் சினிமாவில் நுழைந்து தங்களை வெளிப்படுத்தி உள்ளனர். ஆனால் முதன்முறையாக நாளைய



இயக்குனர் சீசன் 6 ரன்னர் அப்பின் மொத்த டீமும் இந்த குடிமகான் படத்தில் இணைந்து ஒன்றாக வெள்ளி திரையில் நுழைந்துள்ளனர் என்பதுதான் இதில் ஹைலைட்டே.

விஜய் சிவன் அறிமுகக் கதாநாயகனாக நடிக்க, சாந்தினி தமிழரசன் கதாநாயகியாக நடித்துள்ளார். பிக்பாஸ் புகழ் சுரேஷ் சக்கரவர்த்தி, நமோ நாராயணன், சேது, விஜய் டிவி புகழ் கேபிஒய் ஹானஸ்ட் ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இவர்கள் தவிர நாளை இயக்குனர்கள் சீசன்-6 டீமில் பணியாற்றிய கலைஞர்கள் பலரும் இதில் நடித்துள்ளனர்.

வழக்கமாக குறும்பட இயக்குநர்கள் சினிமாவுக்குள் நுழையும்போது தாங்கள் இயக்கி வெற்றிபெற்ற குறும்படங்களையே முழுநீள திரைப்படமாக உருவாக்குவது வழக்கம். அதேபோல் இயக்குனர் பிரகாஷும் தனது 'குட்டி தாதா' குறும்படத்தையே திரைப்படமாக எடுக்கலாம் என முயற்சித்தபோது அதன் பட்ஜெட் பெரிய அளவில் இருந்ததால் முதலில் இந்த குடிமகான் படத்தை எடுப்பது சரியாக இருக்கும் என முடிவு செய்து களத்தில் இறங்கி விட்டார்.

# கிராமப்புற மாணவர்களின் வளர்ச்சிக்கு தமிழகத்தில் 'வித்யாக்யன்' அமைக்கப்படும் ரோஷினி நாடார் மல்ஹோத்ரா அறிவிப்பு

சென்னை, ஜனவரி 29, 2023: பால்கிவாலா அறக்கட்டளை சார்பில், 'பால்கிவாலா@20 ரிமம்பரிங் தி லெஜண்ட்' என்ற புத்தகத்தை, ஹெச்.சி.எல்., தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் ரோஷினி நாடார் மல்ஹோத்ரா வெளியிட்டார்.




இதன் முதல் பிரதியை, டஃபே நிறுவனத்தின் துணை நிர்வாக இயக்குனர் லட்சுமி பெற்றுக் கொண்டார்.

அறக்கட்டளையின் பொருளாளர்களில் ஒருவரும், கஸ்துரி & சன்ஸ் நிறுவனத்தின் இயக்குநரும், தி ஹிந்து, தி ஹிந்து பிசினஸ் லைன் நாளிதழ்களின் வெளியீட்டாளருமான கஸ்துரி பாலாஜியால், பால்கிவாலா@20 ரிமம்பரிங் தி லெஜண்ட் புத்தகம் திருத்தி அமைக்கப்பட்டது.

பால்கிவாலா அறக்கட்டளையின் 20 ஆண்டு கால பயண நினைவுகள், இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. இந்திய அரசியல் சாசனம் பற்றி மிகச் சிறப்பாக அறிந்து வைத்தவர்களில் ஒருவரும், அமெரிக்காவிற்கான முன்னாள் இந்திய துதருமான மறைந்த நானி பால்கிவாலாவின் நினைவாக, இந்த அறக்கட்டளைக்கு பெயர் சூட்டப்பட்டது. பால்கிவாலாவின் 41வது நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சி, அறக்கட்டளையின் சார்பில் இன்று சென்னையில் நடந்தது.

நிகழ்ச்சியில், 'சீதாபூர் முதல் ஸ்டான்ட்போர்டு' வரையிலான, நடுத்தர வர்க்கத்தினரின் கிராமப்புற கல்வியின் மதிப்பு குறித்து ரோஷினி நாடார் விவரித்தார். இதனுடன், நாட்டின் கிராமப் பகுதியில் இருந்து, உலக அளவிலான ஸாடாண்ட்போர்டு, ஜார்ஜ் டவுன் மற்றும் ஐ.ஐ.டி., எய்ம்ஸ் போன்ற உள்நாட்டில் உள்ள முக்கிய கல்வி நிறுவனங்களுக்கு சென்ற சிலரது வாழ்க்கை விபரங்களை மேற்கோள் காட்டினார்.

மேலும், தமிழ்நாட்டில் வறுமை கோட்டிற்கு கீழ் மற்றும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில், ஹெச்.சி.எல்., அறக்கட்டளை சார்பில் 'வித்யாக்யன்' அப்பு தொடங்கப்படும் என அவர் அறிவித்தார். உத்தரபிரதேசம் மாநிலத்தில் முதல் வித்யாக்யன் அமைப்பு, 14 ஆண்டுகளுக்கு முன், 250 கோடி ரூபாய் முதலீட்டில், ஹெச்.சி.எல்., அறக்கட்டளை அமைத்தது எனவும், ரோஷினி நாடார் மல்ஹோத்ரா கூறினார்.

# ஒய் நாட் ஸ்டுடியோஸ் எஸ். சஷிகாந்த் தயாரிப்பில், ஜெயப்பிரகாஷ் ராதாகிருஷ்ணன் இயக்கத்தில் சமுத்திரக்கனி, கதிர், வசுந்தரா நடிக்கும் 'தலைக்கூத்தல்'

சென்னை, ஜனவரி 29, 2023: 'தமிழ்ப் படம்' தொடங்கி, 'இறுதி சுற்று', 'விக்ரம் வேதா' உள்ளிட்ட வித்தியாசமான முயற்சிகள் கொண்ட பல வெற்றிப் படங்களை தயாரித்த திரு எஸ். சஷிகாந்த் தலைமையிலான ஒய் நாட் ஸ்டுடியோஸ், சிறந்த அறிமுக இயக்குநருக்காக தயாரிப்பாளருக்கு வழங்கப்படும் இந்திரா காந்தி விருது மற்றும் சிறந்த வசனத்திற்காக தேசிய விருது ஆகியவற்றை வென்ற 'மண்டேலா' திரைப்படத்தை தயாரித்ததன் மூலம் தேசிய கவனம் பெற்றது. ஜெயப்பிரகாஷ் ராதாகிருஷ்ணன் இயக்கத்தில் 'தலைக்கூத்தல்' என்கிற புதிய படத்தை ஒய் நாட் ஸ்டுடியோஸ் தற்போது தயாரித்துள்ளது. தொடர்ந்து 14 வருடங்களாக கதைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் திறமையான இயக்குநர்களின் உருவாக்கத்தில் பல படங்களை ஒய் நாட் ஸ்டுடியோஸ் தயாரித்து வருகிறது. இந்த வரிசையில் அடுத்த நேர்மையான படைப்பாக தலைக்கூத்தல் வெளியாகவுள்ளது. அமெரிக்காவில் மென்பொருள் பொறியாளராக பணியாற்றிய ஜெயப்பிரகாஷ், அறிமுக இயக்குநர்களுக்கு



வழங்கப்படும் கொல்லப்புடி ஸ்ரீநிவாஸ் விருது பெற்ற 'லென்ஸ்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானார். எந்த இயக்குநரிடமும் உதவியாளராக இவர் பணியாற்றியது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'லென்ஸ்' திரைப்படத்தை தொடர்ந்து 'தி மஸ்கிடோ பிலாஸபி' என்ற படத்தை இவர் இயக்கினார். பல்வேறு திரைப்பட விழாக்களில் இது இடம் பெற்றது. அதற்கு பிறகு தேசிய அளவிலான தொடர் திரைப்படம் (ஆந்தாலஜி) ஒன்றில் ஒரு அத்தியாயத்தை இயக்கியுள்ளார். இது விரைவில் வெளியாகவுள்ளது. "தலைக்கூத்தல்' பற்றி ஜெயப்பிரகாஷ் கூறுகையில், "2018-ல் இந்தப் படத்திற்கான யோசனை தோன்றியது. வயது முதிர்ந்தவர்களை சொந்த குடும்பத்தினரே கொல்லும் இது போன்ற ஒரு பழக்கம் தென் தமிழ்நாட்டில் உள்ள சில பகுதிகளில் நடைபெறுவது மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அதை பற்றி பல்வேறு தளங்களில் ஆராய்ச்சி மேற்கொண்டேன். இது சரியா தவறா என்பதை விவாதிப்பதை விட. எந்த சூழலில் குடும்பத்தினர் இந்த முடிவை எடுக்கிறார்கள் என்பதை யோசித்த போது நிறைய கேள்விகள் தோன்றின. இந்த கேள்விகளுக்கான விடையை தேடுவதே இந்த படத்தின் நோக்கம்," என்றார். தொடர்ந்து பேசிய அவர், "நடுத்தர குடும்பம் ஒன்று இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்கிறது. அப்போது அந்த குடும்பத்தினர் என்ன முடிவு எடுக்கிறார்கள், எவ்வாறு அந்த சூழ்நிலையை எதிர்கொள்கிறார்கள் என்பதை பார்ப்பவர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இப்படம் விவரிக்கும்," என்றார். இந்த கதையை தயாரிக்க முன்வந்த ஒய் நாட் ஸ்டுடியோஸ் எஸ். சஷிகாந்த் மற்றும் இதில் நடிக்க ஒப்புக்கொண்ட சமுத்திரக்கனிக்கு எனது நன்றி என்று இயக்குநர் மேலும் தெரிவித்தார். வையாபுரி, கதிர், முருகதாஸ், வசுந்தரா, கதாநந்தி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் தலைக்கூத்தல் திரைப்படத்தில் நடித்துள்ளார்கள். தமிழ்ப் படம் - 1 மற்றும் 2 ஆகிய படங்களுக்கு இசையமைத்த கண்ணன் நாராயணன் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். யுகபாரதி இரண்டு பாடல்களுக்கு உணர்வுப்பூர்வமான வரிகள் எழுதியுள்ளார். ஒளிப்பதிவு பணிகளை மார்ட்டின் டான்ராஜும், படத்தொகுப்பை டேனி சார்லசும் மேற்கொண்டனர். ஜெயப்பிரகாஷ் ராதாகிருஷ்ணன் இயக்கத்தில் சமுத்திரக்கனி, கதிர், வசுந்தரா நடிப்பில் ஒய் நாட் ஸ்டுடியோஸ் எஸ். சஷிகாந்த் தயாரிப்பில் உருவாகியுள்ள தலைக்கூத்தல் விரைவில் திரைக்கு வரவுள்ளது.

# "என் இனிய தனிமையே முதல் பாடல் இன்று வெளியீடு"

சென்னை, ஜனவரி 29 2023: வளர்ந்து வரும் நடிகர் ஸ்ரீபதி, சகு பாண்டியன் இயக்கத்தில் ஜேம்ஸ் வசந்த் இசையில் உருவாகும் "என் இனிய தனிமையே" என்கிற அவருடைய அடுத்த படத்திற்காக ஆட்டோ புலி ஃபிலிம் ஃபேக்டரி நிறுவனத்துடன் கைகோர்க்கிறார். இந்த படத்தில் கதாநாயகனாக ஸ்ரீபதி நடித்துள்ளார். நாயகியாக ரீஷா நடிக்கிறார். ஸ்ரீபதி 2023ல் வெளியாக உள்ள சில தமிழ் படங்களில் டைட்டில் கதாபாத்திரங்களில் நடித்துள்ளார்.



சதீஷ் சரண் இயக்கத்தில் சைமன் கிங் இசையில் உருவாகியுள்ள 'பெண்டுலம்' திரைப்படத்தில் 'அசுரன்' படப் புகழ் அம்மு அபிராமி மற்றும் நடிகை கோமல் சர்மா ஆகியோருடன் இணைந்து நடித்துள்ளார். மேலும் மோகன் டச்சு இயக்கத்தில் கே.யு கார்த்திக் இசையில் உருவாகியுள்ள 'அங்காரகன்' என்கிற படத்தில் சத்யராஜ் மற்றும் மலையாள நடிகை நியா ஆகியோருடன் இணைந்து நடித்துள்ளார் ஸ்ரீபதி.

'என் இனிய தனிமையே' படம் மூலம் சகு பாண்டியன் இயக்குநராக அடியெடுத்து வைக்கிறார். இந்த படம் சமூகத்திற்கு தேவையான ஒரு கனமான செய்தியுடன் த்ரில்லர் ஜானரில் உருவாகி இருக்கிறது. இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து வரும் 2023 கோடை விடுமுறையில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தங்கர்பச்சான் படங்களில் பணியாற்றிய சிவபாஸ்கரன் ஒளிப்பதிவாளராக பணியாற்றியுள்ளார். ஜேம்ஸ் வசந்தன் இந்த படத்திற்காக இரண்டு பாடல்களை இசையமைத்துள்ளார். 'சீதாராமம்' படத்தின் மலையாள வெர்சனில் இடம்பெற்ற 'ஒரு கரையாரிகே' பாடல் புகழ் சிபி ஸ்ரீனிவாசன் ஒரு அருமையான லவ் பீட் பாடலை பாடியுள்ளார். அதேசமயம் கேரளாவை சேர்ந்த பின்னணி பாடகி வைக்கம் விஜயலட்சுமி இதயத்தை உருக வைக்கும் அம்மா சென்டிமென்ட் பாடல் ஒன்றை பாடியுள்ளார்.

இந்த படத்தின் முதல் பாடல் ஜனவரி 26 அன்று வெளியானது.

தொழில்நுட்பக் கலைஞர்கள் விபரம் தயாரிப்பாளர் ; எஸ்.பி மாலதி நிர்வாக தயாரிப்பாளர் ; ஆட்டோ புலி முருகன் இயக்குனர் ; சகு பாண்டியன் இசையமைப்பாளர் ; ஜேம்ஸ் வசந்தன் ஒளிப்பதிவு ; சிவபாஸ்கரன் படத்தொகுப்பு ; திருச்செல்வம் நடனம் ; வாசு நவதீபன் உதவி இயக்குனர்கள் 'சத்ரியன் சத்யராஜ், அருள் நித்தியானந்தம், சபரீஸ்வரன், கே குருநாத் சேகர் மக்கள் தொடர்பு ; ஏ. ஜான் திட்ட வடிவமைப்பாளர் ; எல்,விவேக் (பிரிம்ரோஸ் என்டர்டெயின்மென்ட்).

# ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் மற்றும் பஞ்சாப் நேஷனல் பேங்க் ஆகியவை நீண்ட கால வங்கிக் காப்பீட்டில் இணைந்துள்ளன

சென்னை, ஜனவரி 29, 2023: இந்தியாவின் முன்னணி உடல் நல காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ், பஞ்சாப் நேஷனல் வங்கியுடன் தனது உத்திசார் கார்ப்பரேட் ஏஜென்சி கூட்டாண்மையை நீண்ட காலத்துக்குப் புதுப்பித்தது. இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் இரண்டாவது பெரிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றான பஞ்சாப் நேஷனல் வங்கி, இந்தியா முழுவதும் உள்ள அதன் அனைத்து கிளைகளிலும் ஸ்டார் ஹெல்த் இன் காப்பீட்டு திட்டங்களை தொடர்ந்து விநியோகிக்கும். இந்த நீண்ட கால கூட்டாண்மை, ஸ்டார் ஹெல்த் இன் வாடிக்கையாளர் சேவை, நன்மதிப்பு மற்றும் சாதனைப் பதிவு ஆகியவற்றின் சான்றாகும்.

இந்த மூலோபாய உடன்படிக்கையின் கீழ், ஸ்டார் ஹெல்த் -இன் வகையில் சிறந்த உடல்நலக் காப்பீட்டுத் திட்டங்கள் வங்கியின் பரந்த விநியோக வலையமைப்பின் மூலம் நாடு முழுவதும் உள்ள சுமார் 10,000க்கும் மேற்பட்ட கிளைகள் மூலம் கிடைக்கும், இது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் அனைத்து உடல்நலக் காப்பீட்டுத் தேவைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வை வழங்குகிறது.

ஸ்டார் ஹெல்த் அண்ட் அலைட் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் -இன் இணை செயல் இயக்குநர் திரு. பிஜு மேனன், "இந்தியாவின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கியுடனான எங்கள் கூட்டாண்மையை புதுப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நீண்ட கால கூட்டாண்மை தொழில்துறையில் அரிதானது மற்றும் வாடிக்கையாளர் மையத்தன்மை மற்றும் திட்ட வழங்கல்களுக்கான ஸ்டார் ஹெல்த் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துகிறது. இந்த மூலோபாய இணைப்பின் மூலம், பி என் பி -இன் வாடிக்கையாளர்களுக்கு தரமான, நீண்ட கால சுகாதார காப்பீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கு எங்கள் வரம்பை விரிவுபடுத்த முயற்சிக்கிறோம். அதிகரித்து வரும் மருத்துவ பராமரிப்பு செலவுகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வாடிக்கையாளர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் இந்த முயற்சி குறிப்பிடத்தக்க சாதனையாக இருக்கும்." என்று கூறினார்.

இந்த கூட்டாண்மையானது, இந்தியா முழுவதும் காப்பீட்டு ஊடுருவலை மேலும் அதிகரிக்கச் செய்யும் அதே வேளையில் பிராந்தியங்கள் முழுவதும் சுகாதாரக் காப்பீட்டை எளிதாக அணுகுவதற்கு இந்தியாவின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் இந்தியாவின் முதல் தனி சுகாதாரக் காப்பீட்டு நிறுவனமான ஸ்டார் ஹெல்த் ஆகிய இருவரையும் செயல்படுத்தும்.

"ஸ்டார் ஹெல்த் -இல், ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் சேவை செய்யும் புதுமையான திட்டங்களை வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். நாடு முழுவதும் பஞ்சாப் நேஷனல் வங்கியின் வலுவான இருப்பு மற்றும் ஸ்டார் ஹெல்த் இன் காப்பீட்டு நிபுணத்துவம் ஆகியவை, இன்று சாமானியர்கள் எதிர்கொள்ளும், இப்போது அதிகரித்து வரும் மருத்துவமனைச் செலவுகள் பற்றிய கவலைகளைத் தீர்க்க உதவும்" என்று ஆனந்த் ராய் கூறினார்.

# கெவி படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்ட யோகிபாபு, கலையரசன்





சென்னை, ஜனவரி 29 2023: ஆத்யக் புரடக்சன்ஸ் சார்பில் கௌதம் சொக்கலிங்கம் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'கெவி'. தமிழ் தயாளன் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். மண்டேலா, பேட்டைக்காளி புகழ் ஷீலா ராஜ்குமார் மற்றும் விஜய் டிவி புகழ் ஜாக்குலின் இருவரும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.. அறிமுக நடிகர் ஆதவன் இந்த படத்தில் கதை நாயகனாக நடிக்கிறார். மெட்ராஸ் படத்தில் வில்லனாக நடித்த சார்லஸ் வினோத், தர்மதுரை புகழ் திருநங்கை ஜீவா ஆகியோர் நடித்துள்ளனர். மேலும் உமர் ஃபரூக், விவேக் மோகன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இவர்கள் மலையாளத்தில் 'வே ஃபாரர்' என்ற படத்திலும் நடித்துள்ளனர்.

மேற்கு தொடர்ச்சி மலை, தேன் ஆகிய படங்களுக்கு வசனம் எழுதிய ராசி தங்கதுரை இந்த படத்தின் வசனங்களை எழுதி உள்ளார்

படத்தின் ஒளிப்பதிவை ஜெகன் ஜெயசூர்யா கவனிக்க, ஏ.ஆர் ரகுமான், அனிருத் ஆகியவரின் ஆர்கெஸ்ட்ராவில் பணிபுரிந்த பாலசுப்பிரமணியன் இசையமைத்துள்ளார். படத்தொகுப்பை அஸ்வத் நாராயணன் மேற்கொள்கிறார்.

800 ஆண்டு கால தமிழக வரலாற்றில் எவ்வளவோ அரசியல் மாற்றங்கள் நடந்தாலும் மாறாத இடம் ஒன்று உள்ளது. அங்கு நடைபெற்ற உண்மை சம்பவங்களின் அடிப்படையில் இந்த படம் உருவாகி வருகிறது.

இந்த படம் பற்றி இயக்குநர் தமிழ் தயாளன் கூறும்போது, "கெவி என்பதற்கு அடிவாரம் அல்லது பள்ளம் என்று பொருள். மலை எப்போதுமே பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அதன் இன்னொரு இருட்டு பக்கம் யாருக்கும் தெரியாது. இத்தனை ஆண்டு கால தமிழக வரலாற்றில் எத்தனையோ ஆட்சிகள் மாறி இருக்கின்றன. எத்தனையோ விஷயங்கள் மாறி உள்ளன. ஆனால் இந்த மலைப்பகுதியில் இன்னும் மாறாத விஷயங்கள் இப்போதும் தொடர்ந்து வருகின்றன. இதை மையப்படுத்தி இந்த படம் ஒரு முக்கிய சமூக பிரச்சனையை பேசுகிறது.

ஒரு சாமானிய மனிதனின் வாழ்க்கையை அருகில் இருந்து பார்க்கும்போது எவ்வளவோ அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை கண்கூடாக பார்க்க முடிகிறது.. அவர்களுடைய வலியை அருகில் இருக்கும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இதை சினிமா மூலமாக வெகுஜனத்தின் பார்வைக்கு கொண்டு செல்லும்போது ஏதாவது மாற்றம் நிகழ்ந்து விடாதா என்கிற நோக்கில் தான் இந்த படத்தை உருவாக்கியுள்ளோம்.

இந்த படத்தில் மலை கிராமத்து பெண்ணாக ஷீலா ராஜ்குமாரும், படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் ஜாக்குலினும் நடித்துள்ளனர். இந்த இருவரும் சேர்ந்து பல பிரச்சனைகளை எதிர்கொண்டு ஒரு இக்கட்டான சூழலை எப்படி சமாளிக்கின்றனர் என்பதை விறுவிறுப்பு கலந்து கூறியுள்ளோம்.

இந்த படத்தின் படப்பிடிப்பு கொடைக்கானலை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெற்றது. படப்பிடிப்பின்போது புயல், மழை, கடும் குளிர் என வெவ்வேறு சீதோஷ்ண பிரச்சனைகளையும் எதிர்கொண்டு படப்பிடிப்பை நடத்தி முடித்தோம். குறிப்பாக இரவு நேர படப்பிடிப்பின்போது குளிர் தாங்காமல் நடிகை ஷீலா ராஜ்குமார் மிகப்பெரிய அளவில் சிரமப்பட்டார். பனியில் அவரது கை கால்கள் விரைத்துக்கொண்டு விட, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அவரை நடந்தே தூக்கிச் சென்று சிகிச்சை அளித்து குணப்படுத்தினோம். அதன்பிறகு மீண்டும் வந்து படப்பிடிப்பில் தொடர்ந்து நடித்து மிகப்பெரிய ஒத்துழைப்பைக் கொடுத்தார்.

அதேபோல படத்தின் நாயகன் ஆதவன் இந்தப்படத்திற்காக இரண்டு வருடம் வேறு எந்த படங்களையும் ஒப்புக்கொள்ளாமல் கடுமையான அர்ப்பணிப்புடன் உழைத்தார். படப்பிடிப்பு நடக்கும் லொகேசன்களுக்கு முன்கூட்டியே சென்று அந்த பகுதி மக்களின் வாழ்வியல் நடைமுறைகளுடன் பழகி, அவற்றை தனது நடிப்பில் பிரதிபலித்துள்ளார். " என்று கூறியுள்ளார்.

இந்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை நடிகர்கள் யோகிபாபு, கலையரசன் ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம் தயாரிப்பு ; கௌதம் சொக்கலிங்கம் இணை தயாரிப்பு ; கார்த்திகேயன் & எப் ஜெ இயக்கம் ; தமிழ் தயாளன் ஒளிப்பதிவு ; ஜெகன் ஜெயசூர்யா இசை : பாலசுப்பிரமணியன் படத்தொகுப்பு ; அஸ்வத் நாராயணன் வசனம் ; ராசி தங்கதுரை கலை ; சரவணன் சண்டை பயிற்சி ; டான் அசோக் மக்கள் தொடர்பு ; ஏ. ஜான்

# தனைரா சென்னை வேளச்சேரி விற்பனையகத்தில் தனது பாரம்பரிய ஆடைகளின் வசீகரமான தொகுப்பை வழங்குகிறது!



சென்னை, ஜனவரி 29, 2023: பாரம்பரியமிக்க டாடா குழுமத்தைச் சேர்ந்த இந்திய பாரம்பரிய ஆடைகளுக்கான பிரத்தியேக பிராண்டான தனைரா, சென்னையில் தனது மூன்றாவது விற்பனையகத்தைத் தொடங்கியிருப்பதன் மூலம் தனது விற்பனை செயல்பாட்டை மேலும் வலுப்படுத்தி இருக்கிறது. இந்த பிராண்ட் இந்தியாவில் தொடங்கும் 36-வது விற்பனையகமான இது, வேளச்சேரியிலுள்ள 100 அடி சாலையில் அமைந்துள்ளது; தனைரா தலைமை நிர்வாக அலுவலரான திரு.அம்புஜ் நாராயண் முன்னிலையில் இவ்விற்பனையகம் திறக்கப்பட்டது.

சென்னை அண்ணாநகரிலும் எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலிலும் உள்ள இரண்டு விற்பனையகங்களில் பாரம்பரிய ஆடைகளின் ரசனைமிக்க வகைகளுக்கு கிடைத்த அமோக வரவேற்பின் எதிரொலியாக, தற்போது இந்த பிராண்டின் மூன்றாவது விற்பனையகம் வேளச்சேரியில் தொடங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய கைவினைத்திறன்களின் ஆத்மார்த்தமான ஒருங்கிணைப்பை தனது ஆடைத் தொகுப்புகளில் வழங்கும் இந்த விற்பனையகமானது சென்னை, வேளச்சேரியிலுள்ள ஸ்ரீ குப்தா பவன் எதிரே 100 அடி சாலையில் கடை எண். 34-ல் அமைந்துள்ளது; இந்த விற்பனையகம் 3,100 சதுர அடி பரப்பில் மிகப்பிரம்மாண்டமாக பரந்து விரிந்துள்ளது. இயற்கையான, தூய்மையான, அசல் இழைகளால் தயாரிக்கப்பட்ட கைவினைத்திறன்மிக்க சேலைகள், ரவிக்கைகள், ரெடிமேட் குர்தா வகைகள் என்று பல்வேறுபட்ட ஆடைகளில் இருந்து வாடிக்கையாளர்களே தங்களது ரசனை மற்றும் விருப்பங்களுக்கேற்ப தேர்ந்தெடுக்கும் ஒரு அலாதியான அனுபவத்தை வழங்குகிறது தனைராவின் இவ்விற்பனையகம். பல்வேறுபட்ட ஆடைகள் மற்றும் மிக நேர்த்தியான கைவினைத்திறன்களைக் கொண்டாடும் வகையில் தூய்மையான காஞ்சிபுரம் பட்டுகள், தென்னிந்திய பட்டுகள், பனாரஸ் பட்டுகள், போச்சம்பள்ளி இகாட்கள், மங்கலகிரி, சந்தேரி, மகேஸ்வரி, ஜம்தனி, துசார் வகைகள் ஆகியவற்றின் புத்துயிரூட்டும் வடிவமைப்புகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

தனைராவின் காஞ்சிபுரம் பட்டுகள் நெசவாளர்களுக்கான ஒரு அர்ப்பணம்; அந்த நெசவாளரின் கைவினைத்திறனும் நம்முடைய பாரம்பரியமும் அவர் நெசவிலும் வார்ப்பிலும் முழுமையாக நிறைந்திருக்கின்றன. தனைராவின் பாரம்பரிய இழைகள் மரபார்ந்த, தெய்வீக வடிவமைப்புகள் மற்றும் தூய்மையான ஜரிகைகளில் இருந்து மீண்டும் உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. வழக்கத்திற்கு மாறான புதுமையான வடிவமைப்புகளில் காலம் கடந்தும் நிலைத்திருக்கும் எண்ணற்ற கருத்துருக்களை மீட்டெடுத்து, புத்துணர்வூட்டும் வண்ணங்களைப் பயன்படுத்தி சமகாலத்திய, நளினமான புடவைகளைப் உருவாக்குகிறது தனைரா. ஒவ்வொரு தூய காஞ்சிபுரம் ஜரிகை பட்டுப்புடவையுடன் ஜரிகை நம்பகத்தன்மையைக் குறிக்கும் சான்றிதழும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு பற்றி தனைராவின் தலைமை நிர்வாக அலுவலர் திரு.அம்புஜ் நாராயண் பேசுகையில், "வரவிருக்கும் கல்யாண சீசனில் சென்னையிலுள்ள விவேகம் நிறைந்த பெண்களுக்கான முக்கியமான ஷாப்பிங் தளமாக வேளச்சேரியில் எங்களது விற்பனையகத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமைப்படுகிறோம். இந்தியா முழுவதுவதிலும் பரவலாக இருக்கும் எங்களது 100-க்கும் மேற்பட்ட க்ளஸ்டர்களில் இருந்து வருவிக்கப்பட்டிருக்கும் பல்வேறுபட்ட வடிவமைப்புகளிலான கைவினைத்திறன்மிக்க புடவைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த தனைரா விற்பனையகத்தில் நிறைந்துள்ளன; புடவை விரும்பிகள், இங்கு வருகை தருவதை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்" என்று தெரிவித்தார். இந்த விற்பனையகத்தின் பிரமாண்ட அறிமுகத்துடன், மிக நுணுக்கமாக நெய்யப்பட்ட ஆடைகளை புடவை ஆர்வலர்கள் கண்டு களிக்குமாறு வரவேற்கிறது தனைரா. வாடிக்கையாளர்களை இதயப்பூர்வமாக வரவேற்கும் வகையில், 2023 ஜனவரி 13 முதல் 17-ம் தேதி வரை தனைரா விற்பனையக தொடக்கத்தைக் கொண்டாடும் வகையில் தங்க நாணயச் சலுகையையும் அமல்படுத்தியுள்ளது; அதன் ஒருபகுதியாக, ரூ.20,000/- மதிப்புள்ள ஆடைகளை வாங்குபவர்களுக்கு 0.2 கிராம் எடையுள்ள தனிஷ்க் தங்க நாணயத்தைப் பரிசாக வழங்குகிறது தனைரா.

# க்ரோமா செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 'வால் ஆஃப் யூனிட்டி' என்ற கலை படைப்புகளுடன் 'கான்ஸ்டிடியூஷன் ஆஃப் ஜாய்' பிரச்சாரத்தை மேற்கொள்கிறது

சென்னை, ஜனவரி 29, 2023: டாடா குழுமத்தைச் சேர்ந்த, இந்தியாவின் முதல் மற்றும் நம்பகமான ஆம்னி சேனல் எலக்ட்ரானிக்ஸ் சில்லறை நிறுவனமான க்ரோமா, இந்தியாவின் குடியரசு தினத்தை முன்னிட்டு, 'கான்ஸ்டிடியூஷன் ஆஃப் ஜாய்' என்னும் மாபெரும் பிரச்சாரத்தை பெருமையுடன் அறிவித்துள்ளது. இந்த பிரச்சாரமானது 2023, ஜனவரி 19-ம் தேதி தொடங்கி ஜனவரி 29-ம் தேதி 2023 வரை வரை நடைபெறுகிறது. கான்ஸ்டிடியூஷன் ஆஃப் ஜாய் பிரச்சாரத்தின் மூலமாக, தனது வழக்கமான கடமையையும் தாண்டி மிகுந்த அக்கறையுடன் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்க வேண்டுமென முனைப்பு காட்டி வருகிறது. இந்தியாவை முன்னேற்றத்தையும், மக்களின் உரிமைகளை பாதுகாப்பதையும் கருத்தில் கொண்டு, இந்திய அரசியல் சாசனம் எழுதப்பட்டதைப் போலவே வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்குவதையும், பல்வேறு தரப்பட்ட மக்களின் வாழ்வில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதையும், வாடிக்கையாளரின் அனுபவங்களை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டு இந்தக் கான்ஸ்டிடியூஷன் ஆஃப் ஜாய் பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கிறது க்ரோமா.

க்ரோமா முதன்முறையாக கருத்துருவாக்கம் செய்து, நவீன செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப முறையில் இயங்கும் 'யூனிட்டி ஆஃப் வால்' கலைப்படைப்பை, டெல்லியில் உள்ள டிஎல்எஃப் மால், குர்கானில் சிகந்தர்பூர், ராஜ்காட்டில் உள்ள கிரிஸ்டல் மால், சென்னையில் ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம், மும்பையில் கட்கோபர் மெட்ரோ நிலையம், கொச்சியில் உள்ள மத்திய சதுக்கம் ஆகிய இடங்களில் அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறது. வாடிக்கையாளர்கள் கலைப்படைப்புகளை கண்டு ரசிக்கும் அனுபவத்தை அடுத்தக்கட்டத்திற்கு அழைத்துச் செல்லும், பார்க்கும் அனுபவத்தை ரசனைமிக்கதாக மாற்றும் வகையில் இந்த கலைப்படைப்பு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட இடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கலைப்படைப்புகளில் க்யூ ஆர் குறியீடு இடம்பெற்றுள்ளன. இதை பொதுமக்கள் தங்களது செல்போன் கேமராவால் ஸ்கேன் செய்யும் போது க்ரோமா பில்டர் மூலமாக வால் ஆஃப் யூனிட்டிக்கு வாடிக்கையாளர்களை அழைத்துச் செல்லும் அனுபவத்தை பெறுவார்கள். இந்த பில்டர்கள் மூலம் கலைப்படைப்புகளை பார்க்கும் போது அதில் மறைந்திருக்கக் கூடிய தேசிய கொடிகளைப் பார்க்க,முடியும். இந்த கொடிகளில் க்ரோமா ஸ்டோர்களில் காட்டி சலுகைகளை பெறக் கூடிய கூப்பன் குறியீடுகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த பில்டர்கள் பயன்படுத்துவதற்கு மிக எளிமையானவை. கலைப்படைப்புடன் க்யூ ஆர் கோட் இடம்பெற்றிருந்தால் ஸ்கேன் செய்யும் போது எளிதில் கண்டறிந்து பயன்படுத்தமுடியும். இந்த முயற்சி க்ரோமாவின் பல அற்புதமான தொழில்நுட்ப மேம்பாட்டுக்கான ஒரு தொடக்கம் மட்டுமே.

ஜனவரி 25 முதல் 27-ம் தேதி 2023 வரை மேற்கண்ட நகரங்களில் உள்ள பல்வேறு பிரபலமான இடங்களுக்கு சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள கலைப்படைப்பின் வாயிலாக கூப்பன் கோட்களை பெற்று கூடுதல் தள்ளுபடிகளை பெறுவதற்கான அற்புதமான வாய்ப்புகள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

ஒரு பொறுப்பு மிக்க பிராண்ட் என்ற முறையில், க்ரோமா தனது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியான அனுபவங்களை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறது. ஒருவரின் வாழ்வில் நேர்மறையானதும், மகிழ்ச்சியானதுமான சூழலை உருவாக்குவதில் க்ரோமா ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்து வருகிறது. இதுபோல் வாடிக்கையாளர்களிடையே மகிழ்ச்சியை உருவாக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது க்ரோமா.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த எம். வர்ஷினி ஸ்ரீ உலக சாதனை



சென்னை, ஜனவரி 29 2023: சென்னை அண்ணாநகரில் உள்ள சி.எஸ்.ஐ ஜெஸ்சி மோசஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் எட்டு வயதே ஆன எம்.வர்ஷினி ஸ்ரீ உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். மூன்றாம் வகுப்பு படிக்கும் அவர் நமது பாரம்பரிய கலைகளான சிலம்பம் மற்றும் தியானக் கலையின் துரோணா மூன்றாவது கண் விழிப்புணர்வு பயிற்சியின் மூலம் தனது இரு கண்களையும் துணியால் கட்டிய நிலையில், மனதால் பார்த்து, பல்வேறு நிறங்களை துல்லியமாக சிலம்பக்கம்பின் சுழற்சி மூலம் தொட்டு, தொடர்ந்து சிலம்பம் விளையாடி உலக சாதனை புரிந்தார். இந்த நிகழ்வு இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ்-ல் முறைப்படி பதிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளராக சி.எஸ்.ஐ ஜெஸ்ஸி மோசிஸ் பள்ளியின் முதல்வர் விமலா ஆஞ்சலினா, துரோணா மூன்றாவது கண் பயிற்சி நிறுவனர் டாக்டர். அருள்முகன், இந்தியா புக் ஆப் ரிகார்ட்ஸ் -ன் தேசிய தலைவர் டாக்டர்.சதாம் உசேன், மாநிலத்தலைவர் ஆண்டனி, யுனைடெட் சிலம்பம் ஸ்போர்ட்ஸ் பெடரேசன் நிறுவனர் டாக்டர்.சத்தியராஜ் ஆசான், தமிழ்நாடு ஆஸ்டெடு அகாடா சங்கத்தின் பொதுச் செயலாளர் செந்தில்நாதன், தமிழ்நாடு ஆஸ்டெடு அகாடா சங்கத்தின் பொதுச்செயலாளர் புவனேஸ்வரி ஆகியோர் உலக சாதனை படைத்த வர்ஷினி ஸ்ரீயை பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் அணிவித்தனர். ஏராளமான பள்ளி, மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்னிலையில் நடந்த இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்ப ஆசான் ஜி. ஆர். முத்துக்குமார் மற்றும் மாஸ்டர் எஸ். தீபா ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தனர்.

# வி ஐ வழங்கும் ரூ. 99 பேக் டிஜிட்டல் இந்தியா வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அறிமுகம்!

சென்னை, ஜனவரி 29, 2023: வி ஐ, டிஜிட்டல் இந்தியாவின் வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பு தேவைப்படுகிற அடித்தட்டு மக்களை நெருக்கமாகச் சென்றடையும் உத்தியின் தொடர்ச்சியாக, அடித்தட்டு வாடிக்கையாளர்கள் அனைவரும் எளிதில் பயன்பெறும் வகையில் இந்தியா முழுவதும் ஆரம்ப நிலை ரீசார்ஜ் பேக் ஆக ரூ.99 பேக்கை வழங்குகிறது இந்தியா முழுவதும் பரவலாக அதிவேக டேடாவுடன் தொலைதொடர்பு சேவைகளை வழங்குகிற நெட்வொர்க்காக திகழும் வி ஐ, மக்களுக்கு அத்தியாவசியமான மொபைல் சேவைகளாக இருக்கும் வாய்ஸ் மற்றும் டேடா சேவைளுடன் கூடிய மொபைல் இணைப்பை இந்தளவிற்கு மலிவான கட்டணத்தில் வழங்கும் ஒரே நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.. வி ஐ வழங்கும் ரூ.99 ரீசார்ஜ் வாடிக்கையாளர்களில் ஒரு அங்கமாக இருக்கும் அடித்தட்டு மக்கள் குறிப்பிட்ட வட்டத்தில் இணைந்திருக்க, 28 நாட்கள் வேலிடிட்டி, 200 எம்பி டேட்டா மற்றும் முழுமையான டாக்டைம் வழங்குகிறது. இது பற்றி வோடஃபோன் ஐடியாவின் தமிழ்நாடு, கேரளா மண்டலத்திற்கான வர்த்தகப் பிரிவு தலைவர் எஸ்.முரளி பேசுகையில், “வி ஐ, மலிவான கட்டணத்தை எதிர்நோக்கி இருக்கும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மிகக் கவர்ச்சிகரமான கட்டணங்களில் மிகச்சிறந்த மொபைல் சேவைகளை வழங்குவதற்கான திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மொபைல் வாடிக்கையாளர்களும் வாடிக்கையாளர்கள் அல்லாதோரும் கூட வெறும் ரூ.99-ல் அதிவேக வி ஐ நெட்வொர்க் வழங்கும் ரீசார்ஜை பெறலாம். இதன் மூலம் அவர்களும் இந்த டிஜிட்டல் யுகத்தில் மொபைல் இணைப்பின் பலன்களைப் பெறுவதைத் தொடர வேண்டுமென்று அழைப்பு விடுக்கிறோம். சமூகத்தில் இருக்கும் அனைத்து மக்களும் பங்கேற்குமாறு மட்டும் அழைக்கவில்லை, அதோடு டிஜிட்டல் மாற்றத்திற்குள் பல வாடிக்கையாளர்கள் தங்களையும் இணைத்துக்கொள்ளவும் இது உதவும்” என்று தெரிவித்தார். வி ஐ. சந்தையிலுள்ள தனது கிராமப்புற ப்ரீபெய்ட் வாடிக்கையாளர்களுக்குச் சேவைகளை முழுவீச்சில் வழங்க புதிய வடிவிலான வி ஐ விற்பனையகங்களைத் திறந்துள்ளது மேலும் வேலை & திறன் மேம்பாடு, அரசுத் தேர்வுக்குத் தயாராகுதல், ஆங்கில மொழித் திறன்கள் உட்படப் பல்வேறு சலுகைகளை இந்திய இளையதலைமுறையினருக்கு அவசியமான தேர்ந்தெடுக்கப்பட்ட சலுகைகளை வழங்குகிறது.

# ரேபிடோ தனது சென்னை ஆட்டோ கேப்டன்களின் உன்னதமான முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் வெகுமதிகள் மற்றும் அங்கீகார நிகழ்வில் கௌரவித்திருக்கிறது!

சென்னை, ஜனவரி 29, 2023: இந்தியாவின் முன்னணி பைக் மற்றும் டாக்ஸி சேவை நிறுவனமான ரேபிடோ, சென்னையில் சமீபத்தில் நடந்த வெகுமதிகள் மற்றும் அங்கீகாரம் நிகழ்வில், தங்களது நிறுவனத்தைச் சேர்ந்த சென்னை ஆட்டோ கேப்டன்களின் சிறந்த முயற்சிகளை அங்கீகரிப்பதில் பெருமிதம் கொள்கிறது. இந்த மாபெரும் நிகழ்வு ஜனவரி 12, 2023 அன்று கோலாகலமாக நடைபெற்றது. சென்னையில் ரேபிடோவின் மிகப்பெரும் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றிய சென்னை ஆட்டோ கேப்டன்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் கொண்டாட்டமாக இந்நிகழ்வு அமைந்திருந்தது..

ரேபிடோவின் வெகுமதிகள் மற்றும் அங்கீகார நிகழ்வில் அந்நிறுவனத்தின் 150 கேப்டன்கள் பங்குபெற்றனர், அவர்களில் 100 ஆட்டோ கேப்டன்கள் மேற்கொண்டு முடித்த வெற்றிகரமான சவாரிகளின் அடிப்படையில் அவர்களுக்கு ரூ. 5 லட்சம் கூட்டு பண வெகுமதியுடன் பரிசுகள் வழங்கப்பட்டன. இவர்களில் முதல் 5 இடங்களைப் பிடித்த ஆட்டோ கேப்டன்களுக்கு தங்க நாணயங்கள், தொலைக்காட்சிகள் மற்றும் தொலைபேசிகள் பரிசாக வழங்கப்பட்டன. சென்னையில் முடிந்த வரையில் அதிக சவாரிகளை வெற்றிகரமாகவும், பாதுகாப்பாகவும் மேற்கொண்ட அவர்களது அர்ப்பணிப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இப்பரிசுகள் வழங்கப்பட்டன. ரேபிடோ நிறுவனம் தனது ஆட்டோ கேப்டன்களுக்கு ஆதரவு கொடுப்பதிலும், அவர்கள் அருமையான பணிச்சூழலை அளிப்பதிலும், அவர்களுடைய வணிகத்தை வளர்ப்பதற்கு ஊக்கத்தொகைகளை வழங்குவதிலும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. ரேபிடோவின் இணை நிறுவனர் பவன் குண்டுபள்ளி கூறுகையில், ’எங்கள் நிறுவனத்தின் மாபெரும் வெற்றிக்கு பங்களிக்கும் வகையில் ஓட்டுநர்-பங்குதாரர்களிடையே இருக்கும் அர்ப்பணிப்பு மற்றும் தரமான சேவைகளை இந்த நிகழ்வு கொண்டாடும் வகையில் அமைந்திருக்கிறது.’ என்றார். அவர் மேலும் கூறுகையில், “எங்கள் ரேபிடோ கேப்டன்கள்தான் எங்களது வணிகத்தின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். அவர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். ரேபிடோவை சென்னையில் உள்ள அனைத்து இல்லங்களிலும் உச்சரிக்கப்படுகிற பெயராக மாற்றியிருப்பதில் அவர்களது பங்கு மிக முக்கியமானது. இதனால் அவர்களின் சாதனைகளை நினைத்து நாங்கள் பெருமைப்படுகிறோம். நாங்கள், ஒரு நிறுவனமாக, எங்கள் ஓட்டுநர்-பங்குதாரர்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, எங்களது தரப்பிலிருந்து சேவை முழுமைக்குமான ஆதரவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக நாம் எதிர்கொண்ட நிச்சயமற்ற காலங்களில், வணிகத்தை நிலைநிறுத்துவதற்கு பணியாளர்களின் திறனை மக்களுக்கு பெருமளவில் சென்றடைய செய்யவும், அவர்கள் மிகச்சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கவும், அவர்களை அக்கறையுடன் பார்த்து கொள்வது மிக முக்கியம். எனவே, எங்களது ஓட்டுநர்-பங்குதாரர்களுக்காக இன்னும் அதிகமாகச் செய்வது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த முயற்சியைத் தொடங்குவது எங்கள் கேப்டன்களின் மன உறுதியை அதிகரிப்பது மட்டுமல்லாமல், எங்கள் சேவைகளை இப்பொழுது இருப்பதைப் போல் வலுவாக தொடரவும் உதவும்.’ என்றார்.

புதுமையான இந்த வெகுமதிகள் மற்றும் அங்கீகார நிகழ்வு முன்முயற்சி உள்ளூர் செயல்பாடுகளுக்கான ஆதரவை அளித்து ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ரேபிடோ தனது ஓட்டுநர்களுக்கு மிகச்சிறந்த, இத்துறையில் இல்லாத வகையில் முழுமையான ஆதரவை அளிப்பதில் உறுதிப்பூண்டுள்ளது. மேலும் தங்களது கேப்டன் மற்றும் அவரது குடும்பத்தின் (மனைவி மற்றும் குழந்தைகள்) உடல்நலம் மற்றும் நல்வாழ்வைக் காப்பதற்காக தனித்துவமான “கேப்டன் ஹெல்த்கேர் பாலிசியை” அறிமுகப்படுத்துவதாக ரேபிடோ அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.. இந்த காப்பீடு ஐ பி டி மற்றும் ஓ பி டி சிகிச்சை, மருத்துவமனையில் அனுமதி மற்றும் அதிகப்பட்சமாக 2 லட்சம் ரூபாய் விபத்து காப்பீட்டு பலன்கள் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய வழங்கப்படுகிறது..

பயணிகளின் மீது அக்கறை காட்டும் வகையில், ரேபிடோ சமீபத்தில் தனது மொபைல் அப்ளிகேஷனில் ஒரு புதிய பாதுகாப்பு அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அம்சம் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை சவாரி செய்யும் ரைடர்களுக்கான நைட் ரைட்ஸ் செக் ஆகும். குறிப்பிட்ட இந்தக் நேரங்களில் ரேபிடோவைப் பயன்படுத்தும் எந்தவொரு பயணியாக இருந்தாலும், அவரது சவாரி முடிந்தவுடன் அவரது பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் ரேபிடோ கால் சென்டரிலிருந்து அழைக்கப்பட்டுவார். அதன் மூலம் அவரது பாதுகாப்பு குறித்த தகவல் ரேபிடோவால் சரிப்பார்க்கப்படும்.

# கர்ப்பிணிப் பெண்கள் தொப்புள் குடலிறக்கம் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

டாக்டர் ஜெயஸ்ரீ ஜெயகிருஷ்ணன் மகளிர் இயன்முறை மருத்துவர், ஃபோர்டிஸ் மலர், அடையாறு



சென்னை, ஜனவரி 29 2023: ஒரு பெண் தன் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவங்களில் ஒன்று மகப்பேறு அடைவது. மகப்பேறு காலத்தில் ஈஸ்ட்ரோஜன் மற்றும் தசைகள் தளர்வு காரணமாக வயிற்று தசை பாதிப்பு, எடை அதிகரிப்பு, தோரணை மாற்றம் மற்றும் ஹார்மோன் மாற்றங்கள் உட்பட பல உடல் மாற்றங்கள் நடக்கும்.

கர்ப்ப காலத்தில் வளரும் கருப்பையால் வயிற்று தசைகளான லீனியா ஆல்பா மற்றும் இணைப்பு திசுக்கள் அளவு விரிவடைகின்றன, இது வயிற்று தசைகள் பிரிப்படுவதை பல வகையில் பாதிக்கிறது. டயாஸ்டஸிஸ் ரெக்டி என்பது ரெக்டஸ் அப்டோமினஸின் விளைவுவாகும். கர்ப்பகால ஹார்மோன்களான ரிலாக்சின் மற்றும் ஈஸ்ட்ரோஜன் ஆகியவை தசைகள் பிரிப்படுவதற்கு உதவுகின்றன. கூடுதலாக, டயாஸ்டஸிஸ் ரெக்டி, அதாவது அடிவயிறு தசை பிரிதல், பிரசவத்தின் போது உந்துதலால் ஏற்படும் அழுத்தத்தால் ஏற்படலாம். கர்ப்ப காலத்தில் மற்றும் அதற்குப் பிறகு வயிற்றில் சில தசைப் பிரிவுகள் ஏற்படுவது இயல்பானது.

உடல் எடை குறியீட்டெண், கர்ப்ப கால எடை அதிகரிப்பு, குழந்தையின் எடை மற்றும் தாயின் வயது ஆகியவை ஒரு காலத்தில் ஆபத்து காரணிகளாக கருதப்பட்டன. இருப்பினும், 2015 ஆம் ஆண்டின் ஆய்வில், இந்த குணாதிசயங்களுக்கும், கர்ப்பிணிப் பெண்களை நோய் தாக்கும் சாத்தியக்கூறுகளுக்கும் இடையே எந்த தொடர்பும் இல்லை என்று கண்டறியப்பட்டது. பிறந்த குழந்தைகளிடையே கூட டயாஸ்டஸிஸ் ரெக்டி ஏற்படலாம், குறிப்பாக அவர்கள் குறைப்பிரசவத்தில் பிறந்து இருந்தால் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். இது அவர்களின் வயிற்று தசைகளின் முழுமையற்ற வளர்ச்சி மற்றும் தசை இணைப்பில் ஏற்படும் பிரச்சனையின் விளைவாகும். பொதுவாக, பிரச்சனை காலப்போக்கில் தானாகவே சரியாகிவிடும்.

லீனியா அல்பா அதாவது வயிற்று மையம் அகலமாகுதல், மலக்குடல், வயிற்று தசையின் இரண்டு பக்கங்களுக்கு இடையே உள்ள இடைவெளியை அசாதாரணமாக விரிவடையச் செய்வது ரெக்டஸ் டயாஸ்டஸிஸ் என அழைக்கப்படுகிறது.

இது ஆண்களையும், மகப்பேற்றுக்கு பிறகான பெண்களையும் பாதிக்கும் என்றாலும், டயாஸ்டஸிஸ் ரெக்டி முக்கியமாக பிறந்த குழந்தைகளையும் கர்ப்பிணிப் பெண்களையும் பாதிக்கிறது. தொடர் உடல் சிரமங்கள், ஒரே பிரசவத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட குழந்தைகள் பெறுகிற பெண்கள் டயாஸ்டஸிஸ் நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். டயாஸ்டஸிஸ் ரெக்டி தீவிரம் பற்றி அறிவதற்கு மகப்பேறு மருத்துவர் அல்லது பெண்களின் ஆரோக்கியத்தில் நிபுணத்துவம் பெற்ற பிசியோதெரபிஸ்ட் ஆகியோரின் ஆலோசனையை அணுகவும். நோயாளி "க்ரோக்" நிலையில், அதாவது வானம் பார்த்த நிலையில் படுத்து, படுக்கை மட்டத்தில் இருந்து தலை, தோள்கள் மற்றும் கைகளை உயர்த்தி, தங்கள் விரல்களை அடிவயிற்றில் கிடைமட்டமாக வைத்து வயிற்றின் தசைகளின் இறுக்கத்தன்மையை அளப்பதின் மூலம் அதன் தீவிரத்தை மதிப்பீடு செய்யலாம். இரண்டு மலக்குடல் இடையில் எவ்வளவு விரல்கள் வயிற்று தசைகளின் தளர்வை உணர்கிறது என்பதை வைத்து அளவிடலாம். வயிற்று தசைகள் விரிவடையும் போது, முக்கிய அறிகுறிகளாக வயிற்றில் தளர்வு அல்லது வீக்கம் இருக்கும். கீழ் முதுகுவலி, கூன் தோரணை, மலச்சிக்கல் பிரச்சனைகள் மற்றும் பலவீனமான இடுப்பு தசைகள் போன்றவைகள் மற்ற அறிகுறிகளாகும்.

கர்ப்ப காலத்தில் இது மோசமடைய அனுமதிக்காமல் முறையான பயிற்சிகளைச் செய்வதன் மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், மேலும் பிறந்து 6 முதல் 8 வாரங்களுக்குப் பிறகு, தொப்புள் குடலிறக்கத்தின் வளர்ச்சியைத் தடுக்க இடுப்பு தசை சிகிச்சை எடுக்க வேண்டும்.

டயஸ்டாசிஸ் ரெக்டி இருக்கும் போது, அடிவயிற்று அழுத்தம் கொடுக்கும் வகையில் கனமான பளு தூக்குதல் பயிற்சிகள், முதுகு வளைவுகள் மற்றும் வயிற்றுத் தசைகளை வீங்கச் செய்யும் அல்லது அதிகமாக விரிவடைய வைக்கும் சில யோகா பயிற்சிகளைத் தவிர்க்கவும். தீவிரமாக இருமும் போது உங்கள் வயிற்றை ஆதரவாக பிடித்துக்கொள்ளவும். நிமிர்ந்த தோரணை மற்றும் வழக்கமான சுவாச முறையை பராமரிக்கவும். உட்கார்ந்திருக்கும் போது உங்கள் கீழ் முதுகிற்கு ஆதரவு கொடுக்கவும். சிறுநீர் மற்றும் மலம் அடக்க முடியாமை மற்றும் வலிமிகுந்த உடலுறவு போன்றவைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும். சிகிச்சை அளிக்கப்படாமல் விடப்படும் டயாஸ்டஸிஸ் ரெக்டி தொப்புள் குடலிறக்கமாக உருவாகலாம்; இது ஆரம்பகால நோயறிதல் மற்றும் தகுதிவாய்ந்த மகளிர் நல பிசியோதெரபிஸ்ட் மூலம் உடல் சிகிச்சையைப் மேற்கொள்வதன் மூலம் தடுக்கப்படலாம். இது கர்ப்பத்தின் தொடக்கத்தில், அதாவது தொப்புள் குடலிறக்கத்தின் ஆபத்து குறைவாக இருக்கும்போது செயல்படுத்தப்பட வேண்டும்.

# இனம் ஏஎம்சி, இனம் இந்தியா விஷன் போர்ட்போலியோ ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, ஜனவரி 29 2023: இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய போர்ட்ஃபோலியோ மேலாளர்களில் ஒருவரான இனம் ஏஎம்சி, அதன் புதிய போர்ட்ஃபோலியோ வழங்கலான, இனம் இந்தியா விஷன் போர்ட்போலியோ (இ ஐ வி பி) ஐ அறிமுகம் செய்வதாக அறிவித்தது.

இந்த வழங்கலானது, குறைந்த பட்ச முதலீடான ரூ.50 இலட்சத்துடன் வேகமாக வளரும் வெகுஜன வசதி படைத்த முதலீட்டாளர்களின் பிரிவை இலக்காகக் கொண்டது. ஃப்ளெக்ஸி-கேப் வழங்கலைக் கருத்தில் கொண்டு, இ ஐ வி பி என்பது சந்தை கேப் மற்றும் யதார்த்தவாத பிரிவு.

இ ஐ வி பி ஆனது, கட்டமைப்பு ரீதியாக நன்கு நிலைநிறுத்தப்பட்ட நிலையான போட்டி நன்மைகள் மற்றும் நிலையான நீண்ட கால வளர்ச்சியை உறுதிசெய்யும் வலுவான செயல்படுத்தும் திறனைக் கொண்ட உயர்தர வணிகங்களைக் கண்டறிவதன் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இனம் ஏஎம்சி ஆனது, நிதி மேலாண்மை, ஆராய்ச்சி மற்றும் இஎஸ்ஜி ஆகியவற்றில் மிகவும் திறமையான, அனுபவம் வாய்ந்த 15 முதலீட்டு வல்லுநர்கள் குழுவைக் கொண்டுள்ளது. பல்வேறு பொருளாதார மற்றும் வணிக சுழற்சிகள் மூலம், இனம் ஏஎம்சி இன் முயற்சித்த மற்றும் உண்மையான முதலீட்டுத் தத்துவம் மற்றும் நுணுக்கமான ஆராய்ச்சி முறை ஆகியவை 20 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ச்சியான சிறந்த செயல்திறனை வழங்கியுள்ளன. இ ஐ வி பி மூலம், அவர்கள் திறமையான வாடிக்கையாளர் சேவையை உறுதிசெய்யும் எளிதான டிஜிட்டல் ஆன்-போர்டிங் நடைமுறையைச் செயல்படுத்தி, வெகுஜன-வசதியுள்ள பிரிவினருக்கு அதே முதலீட்டு அறிவை வழங்குகிறார்கள். இனம் ஏஎம்சி, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள சேனல் பார்ட்னர்கள் மூலம் இ ஐ வி பி ஐ வழங்கும்.

அதன் சமீபத்திய வழங்கலானது, நாடு முழுவதும் தற்போது இருக்கும் சாத்தியக்கூறுகளைப் பயன்படுத்தி, இந்தியா முழுவதும் இருப்பை வழங்க, எனாம் ஏஎம்சி ஐ அனுமதிக்கிறது. இ ஐ வி பி அமெரிக்க டாலர் 1 பில்லியன் வரை நிர்வகிக்கும் உள்ளார்ந்த திறனைக் கொண்டுள்ளது.

இனம் ஏஎம்சியின் இணை நிறுவனரும், தலைமை முதலீட்டு அதிகாரியுமான திரு ஜிதன் தோஷி, இந்த அறிமுகம் குறித்து கருத்து தெரிவிக்கையில், “இந்தியப் பொருளாதாரம் பல தசாப்த கால வளர்ச்சிப் பாதையின் உச்சத்தில் உள்ளது. நீண்ட கால செல்வத்தை உருவாக்குவதற்கான பல வளர்ச்சி வாய்ப்புகளை உறுதிசெய்து, சிறந்தது இன்னும் வரவுள்ள நிலையில், அதிக அளவு நிலைத்தன்மையுடன் உலக வளர்ச்சியை இந்தியா வழிநடத்த தயாராக உள்ளது. எங்கள் முதலீட்டாளர்களுக்கு சிறந்த செயல்திறனை வழங்குவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம், இதன் மூலம் நம்பகமான கூட்டாளராக எங்கள் நிலையை வலுப்படுத்துகிறோம்." என்று கூறினார்.